DINAMANI 24 AUG 09

# திருப்பூரில் பசுமை மாரத்தான் ஓட்டம்





ஈஷா யோகா மையத்தின் பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில் திருப்பூரில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. அதன்தொடர்ச்சியாக மரம் நட்டு வளர்க்கும் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த பசுமை மாரத்தான் ஓட்டம் நடத்தப்பட்டது. இந்த ஓட்டத்தைத் துவக்கி வைக்கிறார் நடிகை ஸ்ரேயா. உடன் நடிகர் பிரகாஷ்ராஜ், சத்குரு ஜகிவாசுதேவ், எம்எல்ஏ சி.கோவிந்தசாமி, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் ஏ.சக்திவேல், துணைமேயர் கே.செந்தில்குமார். (வலது) பசுமை மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்றவர்கள்.

திருப்பூர், ஆக.23: பசுமை ஆர்வலர்கள் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்ற பசுமை மாரத்தான் ஓட்டம் திருப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

ஈஷா யோகா மையத்தின் பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில் திருப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நடந்த பசுமை திருப்பூர் இயக்க தொடக்க விழாவையொட்டி ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மரம் நட்டு வளர்க்கும் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த பசுமை மாரத்தான் ஓட்டம் நடத்தப்பட்டது. திருப்பூர் டவுன்ஹால் முதல் பழைய பஸ் நிலையம் வரை நடந்த இந்த மாரத்தான் ஓட்டத்தை நடிகை ஸ்ரேயா துவக்கி வைத்தார். இதில் 10 வயது முதல் 60 வயது நிரம்பிய பலர் பங்கேற்று ஓடினர்.

இதில் ஆண்கள் பிரிவில் முதல் பரிசை பல்லடத்தைச் சேர்ந்த ஈ.சசிக்குமார் வென்றார். அவருக்கு திருப்பூர் சாயப்பட்டறை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எஸ்.எஸ்.சாமியப்பன் பரிசு வழங்கினார். பெண்கள் பிரிவில் முதல்பரிசை கோவை ஆவாரம்பாளையத்தைச் சேர்ந்த வி.பி.ஸ்ரீநிதி வென்றார். அவருக்கு திருப்பூர் வளம் அமைப்பு தலைவர் கிருஷ்ணசாமி பரிசு வழங்கினார்.